இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள்.ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **திரு.பாலமுருகன், ஆர்.ஆர்.நகர் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர்):**
   திரு.பாலமுருகன் அவர்கள் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் ஆங்காங்கே வேலை செய்வதாகவும் அதனை வரவேற்பதாகவும் ஆராதங்களை சுற்றி இருக்கக்கூடிய கிராமப் பகுதி மக்கள் மிகவும் வறுமைகோட்டிற்கு கீழே வாழ்வதாகவும் 35 ஊழியர்கள் நேரடியாகவும், 50 ஊழியர்கள் மறைமுகமாகவும் பயன்படுவதாகவும், மறைமுகம் என்பதற்கு விளக்கம் தேவை எனக் கூறினார். மேலும், 35 மற்றும் 50 ஊழியர்கள் என மொத்தம் 85 ஊழியர்கள் சுற்றியுள்ள ஏழை எளிய கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் ஏற்கனவே வேலை வாய்ப்பு வழங்கினார்கள் இனிவரும் காலங்களிலும் வழங்கவேண்டும் எனக் கூறினார். மேலும், கடந்த காலத்தின் வரலாறு ராம்கோ நிறுவனத்திற்கு அதிகம் இருப்பதாகவும், அந்நிறுவனத்தில் பொது மக்கள் தொடர்பு அலுவலர் மட்டும்தான் எங்களுக்கு தெரியும், மற்ற அதிகாரிகள் எவரும் எங்களுக்கு தெரியாது. இந்நிறுவனம் மேன்மேலும் வளர வேண்டும் என விரும்புவதாகவும், பன்னாட்டு நிறுவனங்களை ஆதரிக்காமல் உள்நாட்டு நிறுவனங்களை ஆதரிப்பதே எங்கள் நோக்கம், ஆகையால் நிறுவனத்திற்கு எதிராக எங்களுக்கு எந்த கருத்தும் இல்லை. ஆர்.ஆர் நகரினை சுற்றி 149 கடைகள் இருப்பதாகவும், அக்கடைகளைச் சுற்றி குப்பைகளை அகற்றிக் கொண்டிருப்பதாகவும், நிரந்தரமாக குப்பைகள் அகற்ற வேண்டும், இதற்காக மக்கும் குப்பை மக்காத குப்பைகளை சேகரிக்க ஒவ்வொரு கடைக்கும் இரு குப்பைத் தொட்டிகளை வழங்க வேண்டும், இராஜபாளையம் சென்றால் ராம்கோ நிறுவனத்தின் தலைவரின் பார்வையின் கீழ் நடைபெறும் தூய்மைப் பணிகளால் பேருந்து நிலையம் உட்பட அனைத்து இடங்களும் சுத்தமாக இருப்பதாகவும், அனைத்து தொழிற்சங்கங்களும் வாக்கெடுப்பு நடத்தும்பொழுது ஏ.ஐ.டி.யு.சி (AITUC) தொழிற்சங்கங்கள் தான் வெற்றி பெரும் எனவும், ஆனால் இங்கு அவ்வாறு வாக்கெடுப்பு இல்லை, ஏற்கனவே இது தொடர்பாக பொதுமக்கள் தொடர்பு அலுவலரிடம் கோரிக்கை மனுக்கள் கொடுத்ததாகவும், ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைத்துக்கொடுத்ததாகவும், ஆனால் தற்பொழுது அதில் தண்ணீர் வரவில்லை, எனவே, 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு டேங்க் அமைக்க வேண்டும் என்றும், பவர் பிளாண்ட் எதிர்புறம் 100க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகவும், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்யும் பொருட்டு, 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு டேங்க் அமைக்க வேண்டும், தன்னுடைய வீடு தான் நிறுவனத்தின் சுற்றுச்சுவர் அருகில் இருப்பதாகவும், தற்பொழுது தூசு இல்லை, முன்பு தூசு வந்தபோது அதனை

கட்டுப்படுத்தப்பட்டதாகவும், எதிர்காலத்தில் வரலாம், அதே சமயம் உங்களால் அருகில் இருக்கக் கூடிய நிறுவனம் எனும் உரிமையில் வேலை வாய்ப்பு இல்லை, தேசிய நெடுஞ்சாலையில் வேரு எந்த நிறுவனம் இல்லை, பட்டாசு ஆலையில் இறந்து விடுவோம் என தெரிந்தும் அங்கு வேலைக்கு செல்வதாகவும், ராம்கோ நிறுவனத்திற்கு வேலைக்கு வந்தால் உயிருடன் இருப்போம் என நம்பிக்கையுடன் தெரிவித்தார். ஆகையால் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பம் செய்தால் கல்லூரித் தேர்வில் முதல் முயற்சியில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை, எங்கள் கிராமத்தில் தமிழ் வழியில் கல்வி பயின்றதால் ஆங்கில ஆற்றல் இல்லாததால் ஓரிரு முறை தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருப்பவர்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். அந்நிறுவனத்தை சுற்றியுள்ள சத்திரம், ஆர்.ஆர் நகர், எத்திலப்பன்பட்டி, கருப்பண்ணசாரிபட்டி ஆகிய 85 பொது மக்களுக்கு பணி செய்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும், இந்நிறுவனமானது நல்ல நிறுவனம், பன்னாட்டு நிறுவனத்திற்கு இணையாக உள்நாட்டு நிறுவனத்தை வளர்த்தெடுத்து உள்நாட்டு தொழிலை பாதுகாப்போம் எனக் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

2. **<u>திரு.மு.பாலமுருகன், (வச்சக்காரப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவரின் கணவர்):</u>**

இக்கருத்துக்கேட்புக் கூடத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் காலை வணக்கம் தெரிவித்து, ஒரு நிறுவனம் தற்போதுள்ள அளவில் இருந்து உற்பத்தி அதிகரித்தால் தான் அந்நிறுவனம் சீராகவும், சிறப்பாகவும் உயர்ந்து இருக்கும் என்று கருதுவதாகவும், இந்நிறுவனம் ஏற்கனவே வச்சக்காரப்பட்டி கிராமத்தில் அனைவரும் வருமைக் கோட்டிற்கு கீழ் இருப்பதாகவும் ஆகையால் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என தாழ்மையாக கேட்டுக்கொண்டார். மேலும், நாங்கள் நான்கு வருடங்களுக்கு முன்பு கொரோனா கால கட்டத்தில் குடி தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டதாகவும், அது செய்தி தாள்களிலும் வரப்பெற்றதாகவும், கொரோனா கால கட்டத்தில் ராம்கோ நிறுவனம் ஆக்சிஜன் வழங்கி பல உயிர்களை காப்பாற்றியதாகவும், அந்நிறுவனம் இங்கு அமையப் பெற்றிருப்பதால் கடைகளும், பொருளாதார வசதிகளும், வீட்டு வாடகையின் மூலம் 6000, 7000 வருமானம் கிடைக்கப்பெருகின்றது. ஆகையால் இந்நிறுவனம் மேன்மேலும் வளர வேண்டும் என்றும், பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியின் (CSR Fund) மூலம் அதிகமான குப்பைகள் இருப்பதாகவும், அதனை மக்கும் குப்பை மக்காத குப்பை என பிரித்து தூய்மை செய்ய வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார். எங்கள் ஊரில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க ஆழ்துளைக் கிணறு (Borewell) நிறுவனத்தால் அமைக்கப்பட்டிருப்பதாகவும், ஆர்.ஆர். நகரில் பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் ஒரு குடம் 5 ரூபாய்க்கு வழங்க (RO Mineral Water) நிலையம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், மேலும் அந்த 5 ரூபாயும் பராமரிப்பு பணிக்காக மட்டுமே வாங்கப்படுவதாகவும், ஆனால் இந்நிறுவனம் இலவசமாகவே வழங்கக் கூறியது. ஆர்.ஆர் நகர் மற்றும் தடங்கம் பகுதியிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி அமைக்கப்பட்டிருப்பதாவும், ஆதிதிராவிடர் காலனி பகுதியில் ஆழ்துளைக் கிணறு (Borewell) அமைத்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் தொட்டியும் அமைத்துள்ளனர், மேலும், மகளிர் சுய உதவிக்குழுவிற்கு இந்நிறுவனத்திலிருந்து ஏழை எளிய மக்களுக்காக பயிற்சி

மையங்கள் மற்றும் கழிப்பறை வசதிகளும் செய்து கொடுத்ததாகவும், ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைத்துக்கொடுத்ததாகவும், பவர் பிளாண்ட் எதிர்புறம் 100க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருவதாகவும், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்யும் பொருட்டு, 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டும், ஆர்.ஆர் நகர் பகுதியில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்துக் கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டு தனது உரையை முடித்துக்கொண்டார்.

3. **திரு.உ.கருப்பையா, அணைக்கரைப்பட்டி (சாத்தூர் வட்டார 58 கிராம உறவின் முறை தலைவர்)**

இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அவரவர் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் இந்த தொழிற்சாலை நமக்கு என்ன நன்மை செய்திருக்கின்றது, இனி என்ன செய்ய வேண்டும், இங்கே நடக்கக் கூடிய சில கருத்து வேறுபாடுகள் என்ன என்பதை விளக்கி அக்கருத்து வேறுபாடுகளை நீக்கி தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கூறினார். மேலும், இந்த நிறுவனத்திலிருந்து கிடைக்கும் நன்மை நாம் சரியான முறையில் அணுகும் போது உதவிகள் விரைவாக கிடைக்கும். எங்களது 58 கிராம உறவின் முறைகள் சார்பாக கட்டிடம் கட்டும்பொழுது மக்கள் தொடர்பு அதிகாரிகளை அணுகிய பொழுது அவர் ஆவண செய்தார் மேலும், அர்ஜீனா நதிக்கு அருகில் உள்ள கோல்வார்பட்டி கண்மாயை சுத்தம் செய்து, அதன் இருபக்கமும் சுற்றி மரக்கன்றுகளை நட்டு பசுமை செய்து தரக்கோரினார். எங்கள் கிராமங்களை சேர்ந்த பட்டதாரி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டு நிறுவனத்திற்கு தனது கிராம மக்களின் ஆதரவினை தெரிவித்தார்.

4. **திரு.முருகன் என்ற கௌதமன், பாண்டியநகர், விருதுநகர் (ஆதித்தமிழர் பேரவை):**

இக்கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவரையும் ஆதிதமிழர் பேரவையின் சார்வாக வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, கடந்த கால ராம்கோ நிறுவனத்திடம் நல்ல காரியங்களுக்காக தொடர்பில் இருப்பதாகவும், இதற்கு முன் பேசியவர்கள் அனைவரும் வேலை வாய்ப்புக்க முன்னுரிமை வழங்கக்கோரியது அது தன்னிறைவுக்காக செய்வது, தான் குடியிருக்கும் பாண்டியநகர் பகுதியில் மரங்கள் எங்கும் இருக்காது, ஆனால் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆலமரம் என்ற அமைப்பை மக்கள் தொடர்பு அலுவலரிடம் கூறியபோது அதை நற்காரியம் என ஆதரித்ததினால் இன்று பாண்டியநகர் சோலைவனமாக மாறியுள்ளது. கொரோனா ஊரடங்கு கால கட்டத்தில் கூட நான் மக்கள் தொடர்பு அலுவலரிடம் தொடர்பு கொண்ட பொழுது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கு மருத்துவப் பணி, மருத்துவ மீட்புப் பணி அத்தியவசிய பொருட்கள் அள்ளிக் கொடுத்தார்கள். மேலும், பட்டாசு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வசதிகள் போதிய அளவில் இருக்காது, நிறுவனத்திற்க பின்புறம் அமைந்திருந்த பட்டாசு ஆலையில் விபத்து ஏற்பட்டபொழுது அனைத்து அவசர மருத்துவ வசதிகளையும் வழங்கினார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு உண்டு உறைவிடப்பணி மற்றும் களத்திலிருந்து தன்னிச்சையாக வேலை பார்ப்பதற்கு உண்டான அனைத்து உதவிகளையும் செய்திருக்கிறார்கள், ராம்கோ நிறுவனத்தின் மகத்தான பணி மேன்மேலும் தொடர வேண்டுமென்று ஆதித்தமிழர் பேரவையின் சார்பாக கேட்டுக்கொண்டு தனது ஆதரவினைத் தெரிவத்தார்.

**5.திரு.அருணாச்சலம், தம்மநாயக்கன்பட்டி பஞ்சாயத்து எத்திலப்பன்பட்டி கிராமம்:**

நிறுவனத்தின் தலைவர் எங்கள் கிராமத்திற்கு அதிக நன்மைகளை செய்திருக்கிறார், 40 சதவிகிதம் உற்பத்தி அதிகரிப்பதை கேள்விபட்டேன், அதனால் பாதிப்பு வருமா என தெரிந்து கொள்ளும் அளவிற்கு எங்களுக்கு கல்வி அறிவில்லை, எங்கள் கிராமத்திற்கான உதவிகளை அதிகப்படுத்த வேண்டும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கிராமத்தை சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு தானாக முன் வந்து ஏற்படுத்தி தரவேண்டும் என்றும், கொரோனா காலகட்டத்தில் நிறுவனம் செய்த உதவிகளை எங்கள் உள்ளத்தில் உள்ளது. பெருநிறுவனம் போன்று இல்லாமல் ஒரு மனித நேயமுள்ள நிறுவனமாக இருக்க வேண்டும், இந்த விரிவாக்கத்தால் பாதிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பது தங்களுக்கு தெரியும், எனவே எங்களது கிராமத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டு நன்றி கூறினார்.

**6.செல்வி.ரீனா (அரசு மேல்நிலைப்பள்ளி, பட்டம்புதூர்):**

நாங்கள் எங்களின் மன மார்ந்த நன்றியை ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலைக்கு தெரிவிக்க விரும்புகிறோம், இது எங்கள் பள்ளியின் அருகில் உள்ளது. இந்நிறுவனம் எங்கள் பள்ளி வளர்ச்சிக்கும், மாணவர்களின் நலனுக்கும் ஒரு உறுதுணை ஆதராவக இருந்து வருகிறது என்று கூறினார். மேலும், தங்கள் சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக மாணவர்களின் பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் கட்டி கொடுத்துள்ளனர், பசுமையான சுற்றுச்சூழலை வளர்ப்பதற்காக சொட்டு நீர் பாசனம் முறையை (Drip Irrigation System) நிறுவி பசுமை வளையத்தை பராமரித்து வருகின்றனர். எங்கள் பள்ளியில் மட்டுமல்லாமல், அவர்கள் அருகிலுள்ள கிராமங்களுக்கும் தங்களால் முடிந்த பல தேவையான உதவிகளையும் செய்து வருகின்றனர். இந்த நிறுவனம் தொடர்ந்து வளர்ச்சியை நோக்கிச் செல்லும்போது, அது ஒரு தனிப்பட்ட வளர்ச்சி மட்டுமல்ல, முழு சமூகத்தின் வளர்ச்சியாகஅமையும், அவர்களின் மிகுந்த இரக்கமும், பேருதவியும் நாங்கள் மனமார்ந்த பாராட்டுகிறோம். வருங்காலத்திலும் அவர்களிடமிருந்து தொடர்ச்சியான ஆதரவை எதிர்நோக்குகிறோம் எனக் கூறி இத்திட்டத்தை ஆதரித்தார்.

**7.திரு.முருகன், ராஜீவ் காந்தி நகர்**

எனக்கு வலது கண்ணில் ஒரு வலி இருந்தது, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம் நடைபெறுவதாக எனக்கு முன்பே தெரியும். நான் அங்கு பரிசோதனை செய்தபோது, மருத்துவர்கள் என் கண்களில் புரை உள்ளது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் திருநெல்வேலிக்கு, தங்களது சொந்த வாகனத்தில் அழைத்துச் சென்று, மூன்று நாட்கள் தங்க வைத்து, அவர்களே ஆபரேசன் செய்து, பின்னர் வீட்டிற்கு மீண்டும் தங்களது வாகனத்திலேயே அழைத்து வந்து விட்டதாகவும், இந்த உதவியால் தான் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக கூறினார், மேலும், இவ்வாறு உதவி செய்த ராம்கோ நிறுவனம் ஆலை விரிவாக்கம் செய்வதாக செய்தித்தாளில் படித்தோம் என்றும், அவர்கள் மேலும் வளர்ச்சி பெற்று, மேலும் பொதுமக்களுக்கு மருத்துவம் சார்ந்த உதவிகளை செய்யும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டார். ராஜீவ் காந்தி நகர் பகுதியில் பொதுக் கட்டிடம் பிள்ளைகள் படிப்பதற்கு எதுவும் இல்லை, அதை நிறைவு செய்து கொடுக்குமாறு நன்றியுடன் கேட்டுக்கொண்டு, இத்திட்டத்தை ஆதரித்தார்.

**8.திரு.S.அழகர்சாமி, செங்கமலப்பட்டி கிராமம்:**

வணக்கம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கும் அனைவருக்கும் நான் நெஞ்சார்ந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனம் 1961 ஆண்டு தொடங்கப்பட்டு, 2004ல் இரண்டாவது முறையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. மூன்றாவது முறையாக, இப்போது நாம் வந்திருக்கிறோம். மிக்க நன்றி. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், கோட்டாட்சியர் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய உற்பத்தி நிறுவனம் இந்திய அளவில் ஆறாவது உற்பத்தி நிறுவனம் என்று முதலிலேயே தெரிவித்ததற்கு ரொம்ப நன்றி, ஆனால், அவருடைய பவர் பாய்ண்ட் விளக்கம் மிகவும் தெளிவாகவும், அழகாகவும் இருந்தது., அதற்காக அவருக்கு ஒரு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன் என்றும், ராம்கோ நிறுவனத்தின் வேலை நாட்கள் 320லிருந்து 345 நாட்களாக அதாவது 25 வேலை நாட்கள் கூட்டப் போகிறார்கள், அதாவது மீதமுள்ள நாட்கள் தொழில்சாலையின் பராமரிப்பிற்குத்தான் திட்டமிடப்பட்டுள்ளது என்று நான் நினைத்துக் கொண்டேன்., உற்பத்தி கூட்டும் இவ்வேளையில் தர்மரட்சகரை நான் மனதார, தெய்வத்தாரால் வணங்கி பேசுகிறேன். இதுவரை நான் அவரைப் போன்று மனிதரை சந்தித்ததில்லை, அவர் லண்டனில் இருக்கும்போது ஒரு வார்த்தை சொன்னார் – "இந்தியாவிற்கு வந்து நீ பாக்கணும்" என்று. அந்த சந்தர்ப்பத்தில் அவரை பார்க்க முடியவில்லை. ஆனால் அவரை சந்திக்க முடியவில்லை, அப்பேர்பட்ட மகான், அவருடைய வளித்தோண்ரல், அவருடைய மகன் – இந்த ஆறாவது இடத்தைக் கொண்டு வந்து இரண்டாவது இடமாக உயர்த்த வேண்டும் என்று நான் மனமார வேண்டிக்கொள்கிறேன். இந்த நிறுவனம் மேன்மேலும் வளர வேண்டும். இங்கே பேசியவர்கள் ஒவ்வொருவரும் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நீங்கள் ஏற்றுக்கொண்டிருப்பீர்கள். கொரோனா காலத்திலும் சரி, இங்கே செய்த உதவிகளும், எனக்கு செய்த உதவிகளும் சரி. எந்தவொருவருக்கும், உங்களுக்கும் முகம் சுளிக்காமல், நான் மக்கள் தொடர்பு அதிகாரியிடம் தொடர்பு கொண்டவுடன், உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். நீர்நிலைகளுக்காக எப்போதும் பாடுபடுவேன், அந்த நீர்நிலைகளை காக்க வேண்டும் என்று கூறிய வார்த்தைக்காக, உடனடியாக நான்கு குழுக்கள் வந்தன, ஆனால் அவர்கள் முடியாது என்று கூறிய பிறகு, அவர் செய்து கொடுத்தார். அதற்காக நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்றும், இந்த நிறுவனம் மேலும் மேலும் வளர வேண்டும். எவ்வளவு சொன்னாலும் இந்த நிறுவனத்திற்கு வந்தவர்கள், கொரோனா காலத்திலும் சிறப்பாக பணியாற்றியிருக்கிறார்கள். இவ்வளவு சொன்னாலும், அந்த நிறுவனத்திற்கு வந்து, இந்த கொரோனா காலத்தில் செய்த வேலை, மருத்துவமனைகளுக்கு செய்த உதவி, மக்களுக்கு செய்த சேவை, மற்றும் வாடியூரில் இருந்து கோல்வார்பட்டி வரை அர்ஜுனா நதியில் முற்புதர்களை அகற்றி, நீர்நிலைகளை பாதுகாக்கும் வண்ணம் தயவுசெய்து உங்கள் நிறுவனத்தின் மூலம் ஒரு சிறிய தடுப்பணையை அமைக்க வேண்டும். ஒரு சின்ன தடுப்பணை கட்டினால், நிலத்தடி நீர் உயரும் உங்கள் நிறுவனத்திற்கும் பயன்படும், அதே சமயம் மற்ற விவசாயிகளுக்கும், கோல்வார்பட்டி பயனளிக்கும். நீங்கள் கொடுத்த உதவியால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நிலத்தடி நீரை உயர்ந்திருக்கிறது, அதே நேரத்தில், நிலத்தடி நீரின் தரம் உயர்ந்துள்ளது, அந்த நன்றிக்காகத்தான், சென்னையிலிருந்து ஓடோடி வந்துள்ளதாகவும், இந்த கூட்டத்தில் எப்படியும் கலந்துகொள்ள வேண்டும் என்று மாத

காலண்டரில் எழுதி வைத்தேன். ஒவ்வொரு நாளும், அதை குறைத்து கொண்டே எண்ணிக்கையில் வருவோம், ஒரு ஆர்வத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்கான எல்லாவற்றையும் மேலே இருக்கின்ற தர்மரட்சகர் நம்மிடம் சொல்லிக் கொள்கிறார். இந்த நிறுவனத்துடனே ராமசுப்பிரமணிய ராஜா அவருடைய ஆசீர்வாதத்தால், மேன்மேலும் வளர வேண்டும். தற்போது இரண்டாவது இடத்தில் இருக்கும் நிறுவனம், முதலாவது இடத்திற்கு வர வேண்டும் ஆறாவது இடத்தில் இருப்பது ஐந்துக்குள் வர வேண்டும் என கூறினார். மேலும், அவருடைய புகைப்படத்தைப் பார்த்தவுடன், அவருடைய இந்த நிறுவனம் மேலும் மேலும் வளர வேண்டும். ஆறு ஐந்தாக வர வேண்டும். இரண்டு ஒன்று ஆக வேண்டும் என்றுக் கூறி இத்திட்டத்தினை ஆதரித்தார்.

**9. திரு.மன்மதன், பெரிய வாடியூர் கிராமம்:**

தான் பிறவியிலிருந்து கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளி, சிறு வயதிலிருந்து என் தந்தை சில காரணங்களினால் பிரிந்து விட்டார், அதிலிருந்து ராம்கோ நிறுவனம் எனது தந்தையாக இருந்து எனது உயர்வுக்கு காரணமாக விளங்குகிறது, இன்றைக்கு ஒரு அரசு பள்ளியில் பகுதி நேர ஆசிரியராக பணிபுரிவதற்கு இந்நிறுவனம் தான் காரணம் எனக் கூறினார். மேலும், இந்நிறுவனத்தின் விரிவாக்கத்தைப் பற்றி செய்தித்தாளில் எனது சகோதரர் வாசிக்கக் கேட்டேன், இத்தொழிற்சாலை மேலும் விரிவாகும் பொழுது என்னைப் போன்று அநேக மாற்றுத் திறனாளிகளுக்கும் மற்றும் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும், எனவே இநத விரிவாக்கத்தை மனமார வாழ்த்துகிறேன், இந்த விரிவாக்கத்திற்கு தேவையான உதவிகளை மாவட்ட நிர்வாகம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன் எனக் கூறி இத்திட்டத்தை வரவேற்றார்.

**10.திரு.தயாளன் பர்னபாஸ் (சி.எஸ்.ஐ. மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி சாட்சியபுரம்):**

நாங்கள் 1980 முதல் மாற்றுத்திறனாளிகளுக்கு நிறைய உதவிகள் செய்து வருகிறோம் .தற்பொழுது தான் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி (CSR Fund) எல்லாருக்கும் செலவு செய்ய வேண்டும், ஆனால் ராம்கோ நிறுவனம் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி (CSR Fund) என்பது வருவதற்கு முன்பே மாற்றுத்திறனாளிகளுக்கு பல உதவிகளை செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அன்று எல்லா மாற்றுத்திறனாளி குழந்தைகளையும் ஒன்று சேர்த்து அனைத்து குழந்தைகளுக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் மற்றும் உணவுகள் கொடுத்து, பேருந்து வசதிகள் செய்து மாற்றுத்திறனாளிகளுக்காக செயல்படுகிறது, மேலும், எங்களுடைய பள்ளிக்கு ஒரு தேவை வந்தவுடன், அது பற்றி மாவட்ட ஆட்சியரை அணுகினோம், அதற்கு அவர் மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களை அனுப்பிவைத்தார். சுமார் 600 அடி நீளத்திற்கு பேவர் பிளாக் சாலை அமைத்துக் கொடுத்தார்கள். மேலும், தங்களுடைய பள்ளியில் நடக்க முடியாத மாற்றுத்திறனாளிகள் இருந்ததாகவும், அவர்களுக்கு பேவர் பிளாக் சாலையை ராம்கோ செய்தார்கள் எனவும், மேலும், அந்த சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டும், அதற்கான மனுவை சமர்பிப்பதாகக் கூறி இத்திட்டத்தை வரவேற்றார்.

**11.திரு.பீட்டர் (வேளாங்கண்ணி அன்னையின் திருச்சபை,ஆர்.ஆர் நகர் துலுக்கப்பட்டி)**

ஆர்.ஆர்.நகர் சிமெண்ட் ஆலையின் முன்மொழியப்பட்ட விரிவாக்கம் மற்றும் செயல்பாட்டு நாட்களை 320 நாட்களில் இருந்து 345 நாட்களாக உயர்த்துவது தொடர்பான பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தவுள்ளதாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 01.02.2025 அன்று தினமலர் நாளிதழில் வெளியிட்ட அறிவிப்பை நான் கண்டேன். உற்பத்தி நாட்கள் கிளிங்கரை 1.44 மெட்ரிக் டன்களிலிருந்து 2.76 மெட்ரிக் டன்னாகவும், சிமெண்ட் 2.70 மெட்ரிக் டன்களிலிருந்து 4.00 மெட்ரிக் டன்களாகவும் உயர்த்தியுள்ளது என்றும், மேற்கூறிய ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள அன்னை வேளாங்கண்ணி மாதா தேவாலயத்தின் பாதிரியாராக நான் 3 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன், இந்தக் கடிதத்தின் மூலம், இந்தத் தொழிற்சாலை குறித்த சில மதிப்பீடுகளை தமிழில் தெரிவிக்க விரும்புகிறேன் என்றும், உண்மையில், கிராமப்புற மக்களின் சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நட்பு தரத்தை உயர்த்தும் இந்த உன்னதமான மற்றும் மதிப்புமிக்க ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் அதன் நிர்வாகத்திற்காக என் இதயம் மகிழ்ச்சியுடனும் பாராட்டுடனும் நிறைந்துள்ளது, அதன் தகுதியான, தன்னலமற்ற மற்றும் மனிதாபிமான சேவைகளை நான் உன்னிப்பாகக் கவனித்து அனுபவித்திருக்கிறேன். வளர்ச்சிப் பணிகளில் ஒன்று, பந்தல்குடி அருகே ஒரு சுற்றுச்சூழல் பூங்காவை உருவாக்கியுள்ளனர், அது ஒரு காலத்தில் அவர்கள் பயன்படுத்திய சுரங்கத்தை அவர்கள் எப்படி ஒரு அழகான சுற்றுச்சூழல் பூங்காவாக மாற்றினார்கள் என்று நான் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டேன்., ஏழை மக்களுக்கு உதவும் வகையில், இந்த தொழிற்சாலை சமீபத்தில் ஆர்.ஆர். நகர் முக்கு சாலையில் ஒரு பெரிய குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO Plant) அமைத்துள்ளது, இலவச மரக்கன்றுகளை நாடி இந்த தொழிற்சாலையை அணுகுபவர்கள் உடனடியாகவும் ஆர்வத்துடனும் அவர்களுக்கு வழங்குகிறார்கள், இதன் மூலம் பொது இடங்களையும் நிறுவனங்களையும் பசுமையாக்க தங்களால் இயன்றதைச் செய்கிறார்கள். இந்த தொழிற்சாலை தொடர்ந்து மருத்துவ முகாம்களையும் நடத்துகிறது. கொரோனா தொற்றுநோய் தொடங்கியபோது, இந்த தொழிற்சாலை ஒரு ஆக்ஸிஜன் பிளாண்ட்டை அமைத்தது, 600 உயிர்களைக் காப்பாற்றியது. இரண்டாவதாக, உறவைப் பொறுத்தவரை, நிர்வாக அமைப்புக்கும் பணியாளர்களுக்கும் இடையே எந்த இடைவெளியும் இல்லை. இந்தத் தொழிற்சாலையில் ஒரு கடைநிலையில் வேலையைச் செய்யும் ஒருவர் கூட தயக்கம் அல்லது பயம் இல்லாமல் நிர்வாகப் பணியாளர்களைச் சந்தித்து உரையாட முடியும், இந்தத் தொழிற்சாலையின் நிர்வாகம் எப்போதும் அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் சமூக ரீதியாக ஒதுக்கப்பட்ட மக்கள் மீது மென்மையான போக்கைக் கொண்டுள்ளது, இந்தப் பிரிவு மக்களில் பெரும்பாலானோர் தங்கள் வாழ்வாதாரத்திற்காக இந்தத் தொழிற்சாலையைச் சார்ந்துள்ளனர் மூன்றாவதாக இந்தத் தொழிற்சாலை அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது, பலர் எளிதாக வேலை கிடைப்பது மட்டுமல்லாமல், அவர்கள் இணக்கமாகவும் பாரபட்சமின்றி நடத்தப்படுவதையும் அனுபவித்து சாட்சியமளிக்கிறார்கள். எப்போதும் அனைத்துத் தொழிலாளர்களும் இந்தத் தொழிற்சாலையின் பணி முறை மற்றும் சம்பளத்தில் மிகவும் திருப்தி அடைகிறார்கள், இந்தத் தொழிற்சாலைக்கு அவர்கள் ஆழ்ந்த நன்றியுணர்வைக் கொண்டுள்ளனர். இந்த தொழிற்சாலை அண்டை கிராமங்கள், பள்ளிகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் சிறந்த உறவைப் பேணுகிறது.

தேவைப்படுபவர்களுக்கு உதவும் கரங்களை நீட்டுகிறது, எங்கள் தேவாலயம் மற்றும் டி.அம்மாபட்டி மற்றும் கன்னிச்சேரிபுதூரில் அமைந்துள்ள எங்கள் புனித சேவியர் பள்ளிகளும் தொடர்ந்து பல வழிகளில் உதவுகிறார்கள் என்பதை நான் காண்கிறேன். குறிப்பாக, ஒவ்வொரு ஆண்டும் இந்த தொழிற்சாலை ஏழை மாணவர்களுக்கான கல்வி மானியத்துடன் எங்கள் பள்ளிகளை ஆதரிக்கிறது. கன்னிச்சேரிபுதூரில் நாங்கள் ஒரு புதிய பள்ளி கட்டிடத்தை கட்டியபோது, அவர்கள் 2000 சிமென்ட் பைகளை இலவசமாக வழங்கி எங்களுக்கு தாராளமாக உதவினார்கள், சமீபத்தில், எங்கள் பள்ளி குழந்தைகள் ஆழ்குழாய் நீர் காரணமாக வயிற்றுப் பிரச்சினையை எதிர்கொண்டதாகவும், அதற்காக தண்ணீர் தொட்டிகளுடன் கூடிய தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை இரண்டு பள்ளிகளுக்கும் ராம்கோ நிறுவனம் வழங்கியுள்ளனர். ஒவ்வொரு வருடமும், செப்டம்பர் மாதம் எங்கள் தேவாலயத்தின் வருடாந்திர விழாவைக் கொண்டாடும்போது, ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலை மகிழ்ச்சியுடன் மேடை பந்தல் அமைக்கிறது, குடிநீர் வழங்குகிறது, வளாகத்தை சுத்தம் செய்ய உதவுகிறது, வேளாங்கண்ணி மாதா மரச்சட்டத்திற்கு தொடர் அலங்கார மின் விளக்குகள் ஏற்பாடு செய்து கொடுத்தது. ஆர்.ஆர்.நகரில் உள்ள எங்கள் தேவாலய வளாகத்தில் அன்னதான மண்டபம் கட்ட உடனடியாக 600 சிமெண்ட் பைகளை இலவசமாக வழங்கியதாகவும், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள இந்த தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ளதால், வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களும், சுற்றுலாப் பயணிகளும் எங்கள் தேவாலய வளாகத்திற்கு வருகிறார்கள். அவர்கள் ஓய்வெடுக்க ஒரு தோட்டத்தைத் தேடுகிறார்கள். மேலும் எங்கள் தேவாலய வளாகத்திற்கு டுநுனு உயர் மின் கோபுர விளக்குகள் கொண்ட ஒரு உயர் கோபுர மின் விளக்கும் தேவை, இதற்காக இந்த தொழிற்சாலை ஆவணம் செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, எங்கள் பள்ளிகளுக்கு பள்ளிப் பேருந்து தேவை என்பது குறித்து சில நிர்வாக அதிகாரிகளிடம் ஏற்கனவே பேசியிருந்தோம், கிராமங்களில் இருந்து குழந்தைகளை அழைத்து வர விசாலமான பள்ளிப் பேருந்து இல்லாததால், 98 ஆண்டுகள் பழமையான எங்கள் பள்ளிகள் மூடப்பட உள்ளன. இந்தக் கடிதத்தின் மூலம் எங்கள் பள்ளியின் உயிர்வாழ்வைக் காப்பாற்ற எங்கள் உண்மையான தேவையைப் பூர்த்தி செய்ய இந்த தொழிற்சாலை நிர்வாகத்திடம் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறோம். ஆர்.ஆர்.நகர் ராம்கோ சிமெண்ட் ஆலையின் விரிவாக்கம் மற்றும் செயல்பாட்டு நாட்களை அதிகரிப்பதை நான் மனதார வரவேற்பராதகக் கூறி தனது நன்றியினை தெரவித்துக் கொண்டார்.

**12.திரு.முத்துப்பாண்டி (ராஜிவ்காந்தி நகர்):**

ராம்கோ நிறுவனம் நடத்தக்கூடிய இந்த விரிவாக்காத்தை ஆதரிப்பதாகவும், நான் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிப்பதாகவும், என் படிப்பிற்குத் தேவையான அனைத்து கல்வி ஊக்கத்தொகை மற்றும் நோட்டுப் புத்தகங்கள் இந்நிறுவனம் வழங்கியதாகவும், என்னைப் போன்று மற்ற மாணவர்களுக்கும் படிப்பதற்கான உதவிகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். ராம்கோ நிறுவனம் மேன்மேலும் வளர்ந்து இது போன்ற உதவிகளை செய்ய வேண்டும் எனக் கூறி இத்திட்டத்தை வரவேற்றினார்.

**13.திருமதி.மஞ்சுளா (அரசு ஆதிதிராவிடர் தொடக்கப்பள்ளி, சோரம்பட்டி):**

ராம்கோ கல்வி நிறுவனமானது இரண்டு வருடங்களுக்கு முன் 14 ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு ஸ்மார்ட் டிவி வழங்கி தன்னார்வலர்கள் மூலம் மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு ஆதிரிராவிடர் பள்ளிகளை நல்ல முறையில் செயல்பட வைப்பதாகவும், மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வித் திறன் மற்றும் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு ராம்கோ நிறுவனமே பள்ளி அளவில், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தி பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். இது போன்று மேன்மேலும் ஆதிதிராவிடர் பள்ளிகளுக்கு பல உதவிகள் செய்யுமாறு கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

**14.திரு.முத்துராஜ் (வச்சக்காரப்பட்டி)**

மாசு கட்டுப்பாடு வாரியம் செயலானது இயற்கை எந்த அளவிற்கு பாதிக்கப்படுகிறது என்றும், எந்த அளவிற்கு இயற்கையை பாதுகாக்கின்றனர், காற்றில் சல்பர் டை ஆக்ஸைடு, நைட்ரஜன் சல்பர் டை ஆக்ஸைடு பாதிப்பு சம்பந்தப்பட்ட பொது மக்களுக்கோ அல்லது நிறுவனத்தில் வேலை பார்க்கும் கடைநிலை ஊழியர்க்கு தெரிய வாய்ப்பில்லை. அதைப்பற்றி தொழிற்சாலையை நம்பி வேலைக்கு வரும் பாமர மக்களுக்கு உபயோகப்படுத்தப்படும் அமிலம் மற்றும் காரத்தன்மை உடைய வேதிப்பொருட்களுடைய தன்மை பற்றியும் அதனால் ஏற்படும் காற்று மாசு மற்றும் உடல் உறுப்புகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றியும் விளக்க வேண்டும். மேலும், அப்படி செய்தார்கள் என்றால் அப்படி இல்லையென நினைப்பதாகவும் கூறினார். 2021-ம் ஆண்டு தொழிற்சாலையின் ஒரு நுழைவுப் பகுதியில் நிலக்கரி ஏற்றிக் கொண்டு தார் சாலையின் வழியாக ரயில் பாதையில் ரயில் தொழிற்சாலைக்குள் வரும் பொழுது தொழிற்சாலையினால் நியமிக்கப்பட்ட காவலர் வாகன போக்குவரத்தை நிறுத்தும் ரயில்வே டிராப் கேட் போடவில்லை, தானும் ஒரு வாகன ஓட்டுநர் ஒரு நான்கு சக்கர வாகனத்தில் வரும் பொழுது நிறுவனத்தின் வாசலில் இருந்து ஒருவர் எதிரே வந்ததாகவும், அப்பொழுது தூசு தன் பார்வையை மறைத்ததாகவும், தான் வந்ததை அவரும், அவர் வந்ததை நானும் கவனிக்கவில்லை. மேலும், இது தன்னுடைய தவறாகவும் இருக்கலாம், சம்பந்தப்பட்ட எதிரே வந்தவர் தவறாகக் கூட இருக்கலாம், ஆனால் அந்த இடத்தில் இருந்த சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்தவருக்கு மட்டுமே யார் மேல் தவறு என்று தெரியும், என்னுடைய தவறாக கூறப்பட்டது அதற்கு காரணம் அந்த இடத்தில் வந்த தூசுதான் காரணம் அதற்கான அந்த நிகழ்வின் CCTV பதிவு தன்னிடம் இருப்பதாகக் கூறினார். மேலும், மாசு இருப்பது உண்மை என்றும் கூறினார். தொழிற்சாலையின் அலுவலர்கள் அடித்தட்டு மக்களிடம் மனிதத் தன்மையுடன் அணுகுவதில்லை, அன்பான அணுகுமுறையில் 80 சதவிகித தேவை பூர்த்தி செய்யப்பட்டதாகவும் மீதம் 20 சதவிகிதம் பூர்த்தி செய்யப்படவில்லை, மக்களுக்காக திறக்கப்பட்ட R.O பிளாண்ட்-ன் பயன் மக்களை சென்றடைந்ததா என்று ராம்கோ நிறுவனத்தினர் கண்காணிக்கவில்லை, அந்த இடத்தில் உள்ளவர்கள் அதிகாரம் செய்வதாகவும், அவர்களுக்கு தொடர்புடையவர்களுக்கு மட்டுமே தேவையை பூர்த்தி செய்வதாகவும், அது சமுதாக ரீதியாக நிர்வாகத்திற்கு நல்லப் பெயருக்கு பதில் கெட்டப் பெயரே வாங்கித் தருகிறீர்கள். மேலும், தான் ஒரு யூடியூபர். மக்களிடம் ஆலையைப்பற்றி கருத்துக்கேட்ட போழுது 80 முதல் 95 சதவிகிதம் பேர் சாதகமாக கூறினாலும், மீதமுள்ள 5 சதவிகிதம் பேர் ஏன் மாற்றுக் கருத்து கூறினார்கள் என்றால் அதற்கு மாசு தான் காரணம், அதை தடுக்க சரியான நடவடிக்கையை

எடுத்து 100 சதவிகிதம் மக்களின் நம்பிக்கையை பெற வேண்டும். இந்த ஆலை விரிவாக்கம் தொடர்பாக பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த இருப்பதைப் பற்றி தெரிவிக்க துண்டு பிரசுரங்களும், வாகனத்தில் ஒலிபெருக்கி மூலம் பிரச்சாரம் அனைத்து கிராமங்களிலும் செய்திருக்க வேண்டும், ஆனால் தனக்கு தெரிந்த வகையில் ஆலையின் மிக அருகாமையில் மட்டும் செய்யப்பட்டதாக கூறினார். மேலும், நிறைய கிராமங்களில் போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகளும் இல்லை, 1987 சர்வேயின் படி அர்ஜீனா நதி அமைந்துள்ளபகுதியின் மேலோட்ட நிலத்தடி நீர் மட்டம் 75 அடி இருந்தது 2023 சர்வேயின் படி 350 அடியில் இருந்து 550 அடி வரை குறைந்துள்ளதாக கூறினார். மேலும், அர்ஜீனா நதியை சார்ந்து இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் 450 அடிக்கு மேல் ஆழ்துளைக் கிணறு அமைக்க அனுமதிப்பதில்லை என்பது குறையாகவும், மேலும், சிமெண்ட் ஆலை விரிவாக்கத்திற்கு நிலம் வாங்கும் பொழுது விவசாயம் செய்யும் தன்மையில்லாத நிலத்தை மட்டுமே வாங்க வேண்டும் மேலும், விவசாயம் நிலம் வாங்கும் போது அந்த நில உரிமையாளர்களிடம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும், அது விவசாயிக்கும், நிறுவனத்திற்கும் பயன்தரும் வகையில் இருக்க வேண்டும். அந்த நிலத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து கொடுத்து அங்கும் விளைவிக்கப்படும் பொருட்கள் நிர்வாகமே கொள்முதல் செய்ய வேண்டும் என்று வேண்டுதல் விடுத்தார். ஆலையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலையில் ஈடுபட்டுள்ளோருக்கு இ.எஸ்.ஐ மற்றும் பி.எப் போன்ற பயன்கள் கிடைக்க ஆவணங்கள் செய்ய வேண்டும் என்று கூறினார். ராம்கோ நிறுவனத்தின் ஒரு ஒப்பந்த தொழிலாளரின் கீழ் தான் கட்டுமான தொடர்பான வேலை இரவு நேரம் வேலை செய்யும் பொழுது இயந்திரத்தின் பழுது காரணமாக தவறு நிகழ்ந்ததால் அதற்கு தாங்கள் அஜாக்ரதையுடன் வேலை செய்தது தான் காரணம் என்று ஒப்பந்த தொழிலாளர் உடனே எங்களை வெளியே செல்லுமாறு கூறினார், அப்படி வெளியே செல்லும் பொழுது, ஆலையின் உள்ளே வரும் பொழுது சரிபார்க்கப்பட்ட ஆவணங்களைப் பற்றியும் வேறு எதைப் பற்றியும் எங்களிடம் கேட்கவில்லை என்றும், இந்த அணுகுமுறையில் மாற்றம் தேவை என்று அறிவுறுத்தினார். மேலும், தான் சம்பந்தபட்ட சானார்பட்டியில் 300 பேர் வசிக்கின்றனர். ராமகுடுவன்பட்டி, இருளம்பட்டி போன்ற கிராமங்கள் உள்ளதாகவும் மற்றும் பட்டம்புதூர் வச்சக்காரபட்டி போக்குவரத்து வசதியை மேம்படுத்தி, ஓட்டநத்தத்தில் உள்ள பள்ளி குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வடமாநிலத்தின் தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து உள்ளூர் தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்க வேண்டும். மக்களுக்கு வழங்கும் உதவிகளை ராம்கோ நிறுவனம் நேரடியாகவே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**15. திருமதி.சங்கரேஸ்வரி, கன்னிசேரிபுதூர்**

அவர்களது மகன் ஒரு மாற்றுத்திறனாளி, அவர் சில நாட்கள் ராம்கோ முப்பந்தல் ஆலையில் பணிபுரிந்தார். 2012ல் ஏற்பட்ட விபத்தால் அவரால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கமுடியவில்லை. மேலும் அவரது தந்தையும் ஒரு மாற்றுத்திறனாளி என்பதால் அவரது மகனுக்கு ராம்கோ நிறுவனத்தில் வேலை வாய்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த ஆலை மென்மேலும் வளர ஆண்டவரை பிரார்த்திப்பதாகவும் இந்த திட்டத்தை வரவேற்பதாகவும் கூறினார்.

**16. ஆர்த்தி, (தென்னிந்திய திருநங்கை அமைப்பு, தூத்துக்குடி)**

பொதுவாக திருநங்கைகளை புறக்கணிக்கும் இந்த சமூத்தாயத்தில் எங்களையும் சக மனிதர்களை போல் பாவித்து ராம்கோ நிறுவனம் 23 பசுமை வீடுகளுக்கு கட்டுமானத்திற்கு உதவ வேண்டும் என்று வேண்டுகோள் வைத்ததாகவும் உடனடியாக ராம்கோ நிறுவனம் 23 வீடுகளுக்கு தேயையான 1200 சிமெண்ட் மூட்டைகளை இலவசமாக வழங்கியதோடு மட்டுமல்லாமல் கட்டுமான பணிகளை முழுமையாக முடித்து அவர்கள் அந்த வீட்டில் குடியேற உதவியாதாக தெரிவித்தனர். தூத்துக்குடியில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கபட்ட அவர்களுக்கு ராம்கோ நிறுவனம் உடனடியாக அவர்களுக்கு தேவையான உணவு பொருட்கள் மற்றும் அத்தியவசிய பொருட்களை வழங்கியதாகவும் கூறினார்கள். தூத்துக்குடியில் அமுதா நகரில் வசிக்கும் 15 திருநங்கைகளுக்கு தையல் பயிற்சி ராம்கோ நிறுவனம் அளித்து வருவதாகவும் கூடிய விரைவில் ராம்கோ நிறுவனம் சார்பாகவும் தையல் கடை நிறுவுவதாகவும் கூறினார்கள். ராம்கோ நிறுவனம் மேன்மேலும் வளரும்போது அவர்களுக்கு தேவையான உதவிகள் இரண்டு மடங்காக கிடைக்கும் என்று கூறி இந்த திட்டத்தை வரவேற்று ஆதரவு தெரிவித்தார்.

**17. திரு.பரத் ஆசிரியர் ராமமூர்த்தி அரசு மேல்நிலைபள்ளி நடுவப்பட்டி**

ராம்கோ 5S திட்டத்தை செயல்படுத்தி கொண்டிருப்பதால் ஆலையில் மாசு குறைவாக இருப்பதாகவும் அவர்களது பள்ளிக்கும் 5S திட்டத்தை செயல்படுத்த உதவியதால் அவர்களது பள்ளி மேன்மையடைந்தாதகவும் அதனால் அவர்களது திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் கூறினார். மேலசின்னையாபுரம்இ கோகுலம்பட்டியில் உள்ள குவாரியை சுற்றியுள்ள வேலிக்கருவேல மரங்களை அகற்ற வேண்டும் மேலும் பயன்படுத்தாத குவாரியை மழைநீரை சேரிக்க பயன்படுத்த வேண்டும் எனவும், அர்ஜுனா நதியில் உள்ள முட்புதர்களை அழித்து அதன் கரைகளில் அரசும் மற்றும் ராம்கோ நிறுவனம் அந்த இடங்களில் பனைமரம் மற்றும் கனி தரக்கூடிய மரங்களை வைக்க வேண்டும் அதனால் சுற்றுப்புறத்தில் உள்ள கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும் என்று கூறினார். பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி திட்டத்தில் 38 லட்சம் மதிப்பீட்டில் பள்ளிக்கு சுற்றுசுவரை ராம்கோ நிறுவனம ரூ12 இலட்சம் வழங்கி சுற்றுச்சுவர் அமைத்து கொடுத்தார்கள். பள்ளிக்கு ரூ236000 வழங்கி கலையரங்கம் கட்டுவதற்காக உதவினார்கள். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். புதிய தொழிலை ராம்கோ நிறுவனம் நிறுவி படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். இந்த நிறுவனம் மென்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்தி திட்டத்திற்கு வரவேற்பு தெரிவத்தார்.

**18.திரு.ராமசாமி தவில் வித்வான் விருதுநகர்**

விருதுநகரில் கடந்த 16 வருடங்களாக நடத்தி வரும் இசை விழாவிற்கு ராம்கோ நிறுவனம் 3 வேளைக்கும் உணவு வழங்கியதாகவும் தனது இசைப்பள்ளியில் ஏழை மாணவர்கள் பயன்றுவருவதாகவும் அவர்களுக்கு தவில் மற்றும் நாதஸ்வரம் வழங்கி உதவ வேண்டும் என்று கூறி ஆலை விரிவாக்கத்திற்கு தனது மனமார்ந்த ஆதரவினை தெரிவித்தார்.

## 19 திரு.மணிமுத்து அறம் அறக்கட்டளை சாத்தூர்

அரசு நடத்தும் போட்டி தேர்வுகளுக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதாகவும் அந்த மாணவர்களுக்கு உணவினை வழங்கியதாகவும், மகளிருக்கு தையற்பயிற்சிக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கியதாகவும் அவர்களது அறக்கட்டளையை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். மேலும் நாம் உள்நாட்டு உற்பத்தியை நாம் எப்போது பெருக்குகிறோமோ அப்போதுதான் நாடு முன்னேறும் எனவே இந்த ஆலை விரிவாக்கம் பல்வேறு ஏழை மக்களுக்கு ஒளிவிளக்காக அமையும் என்று நம்புவதாகவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கும். ராம்கோ நிறுவனம் பல்வேறு சமூக நல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக இதற்று முன்பு பேசியவர்கள் வாயிலாக அறிவதாகவும் அதனால் இந்த திட்டத்தை வரவேற்பதாக கூறினார்.

## 20.திரு.குமரேசன் (சிகரம் இளைஞர் நற்பணி மன்றம் அஞ்சம்பட்டி)

அவர்களது கிராமத்திற்கு குடிநீருக்கு சிரமமாக இருந்ததாகவும் நிலத்தடி நீரை பயன்படுத்தும்போது சிறுநீரக கல் பாதிப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ராம்கோ நிறுவனம் அவர்களுக்கு 7 இலட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பை அமைத்து தண்ணீர் பிரச்சனை தீர்த்தாகவும் தற்போது குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பு செயல்படாத நிலையில் இருப்பதால் அதனை சரிசெய்து குடிநீர் பிரச்சனையை நீக்க வேண்டும். அவர்களது கிராமத்திற்கு மேற்கூரையுடன் கூடிய தகன மேடை மற்றும் தண்ணீர் தொட்டி வசதியை அமைக்க உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் இந்த ஆலை விரிவாக்க திட்டத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

## 21.திரு.ஆறுமுகம், துலுக்கப்பட்டி:

திரு.ஆறுமுகம் என்பவர், அருகிலுள்ள கிராமங்களில் அடிப்படை வசதிகள் குறைவாக உள்ளதாகவும், கிராம மக்களுக்கு சிறுநீரக கல் மற்றும் உப்புச்சத்து சார்ந்த பிரச்சனைகள் இருப்பதாகவும், மருத்துவ முகாம் நடத்த வேண்டும். ஆலைக்கு எதிர்புறம் உள்ள சர்வீஸ் ரோட்டில் தொழிற்சாலை மற்றும் பொது வாகனங்கள் செல்லும் போது தூசு வருவதாகவும், மேலும், நாள்தோறும் நூற்றுக் கணக்கான மக்கள் அப்பாதையில் செல்கிறார்கள். அதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மாசு கட்டுப்பாடு வாரியம் அதனை கண்காணிக்க வேண்டும். மேலும், உள்ளூர் மக்களுக்கு வேலையில் முன்னுரிமை அளிக்க வேண்டும், வேலைக்காக நேர்முகத் தேர்வு நடத்தும் பொழுது உள்ளூர் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும், ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறை உள்ளது என்றும், ஆலை விரிவாக்கத்தினால் மேலும் அதிகரிக்கலாம் என்று கூறினார். ஆலையை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களில் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் எனக் கூறி தனது உரையை முடித்தார்.

**22.திரு.மகேஷ்வரன் (தர்ம ரக்ஷன சமிதி அமைப்பின் மாவட்ட செயலாளர்)**

திரு.மகேஷ்வரன் என்பவர், இதற்கு முன்வு கருத்து தெரிவித்தோர் கூறியது போல மாசு என்பது தொழிற்சாலையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு உட்பட்டே இருப்பதாகவும், ராம்கோ நிறுவனத்தினால் மக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை, ஒரு சில நபரால் தவறான புரிதல்கள் மக்களிடையே கொண்டு செல்லப்படுகிறது, இவர்களும் ராம்கோ நிறுவனத்தால் பயன் பெற்றவர்களே என்றும், இங்கு இந்த ஆலை நிறுவப்பட்டதற்கு பிறகு ஆர்.ஆர் நகர் பகுதியில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டதாகவும், ராம்கோ நிறுவனத்தால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைந்துள்ளனர், ரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் தபால் நிலையம் வந்ததாகவும், வேலை வாய்ப்பு பொருத்த வகையில் நிறுவனம் அனைவருக்கும் சமமான வாய்ப்பை வழங்குவதாகவும், நிறுவனத்ததை சுற்றியுள்ள கிராம பொது மக்கள் தங்களுடைய திறமைகளையும், தகுதிகளையும் ஆலைக்கு தேவைக்கேற்ப வளர்த்து கொள்ளுவதன் மூலம் பயனடையலாம் என்றுக் கூறி ஆலை விரிவாக்கத்திற்கு பின்னர் சுற்றியுள்ள கிராமங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

**23.திரு.சதீஸ்பாண்டி, கருப்பன்னசாரிபட்டி**

திரு.சதீஸ்பாண்டி என்பவர், தான் இங்கு 30 வருடங்களுக்கு மேல் வசித்து வருவதாகவும், இதற்கு முன்பு ஆலைக்கு ஆதரவாக பேசியவர்கள் ஆலைக்கு தொடர்பு உடையவர்கள் என்றும் ஆலையினால் பயனடைந்தவர்கள் எனவும், அவர்கள் நிறுவனத்தால் பெற்ற பயன்களை மட்டும் அதிகமாக கூறியிருப்பார்கள், ஆலை நிறைய நன்மைகள் செய்துள்ளது உண்மைதான் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் உண்டு, இக்கூட்டம் நடைபெறும் நாள் செவ்வாய்க் கிழமை என்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் அன்றாட தேவைக்காக வேலைக்கு சென்றிருப்பார்கள், எனவே சுற்றியுள்ள நான்கு கிராமங்களிலும் கருத்து கேட்க வேண்டும். அப்போதுதான் கருத்து முழுமை அடையும், ஆலையினால் ஏற்பட்ட தாக்கங்களை ஆலை நிர்வாகம் சரிசெய்ய முடியும் என்று நம்புவதாகவும், மேலும், மழைக்காலங்களில் சாலைகளில் தண்ணீர் தேங்கி நிற்பதாகவும், வடிகால் வசதிகள் இல்லை, மாலை 6 மணிக்கு மேல் பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் கனரக வாகனங்கள் சாலையில் நிற்பதாகவும், இது போன்ற அனைத்து இடையூறுகளை ஆலையினால் சரிசெய்ய முடியும், அதற்கு அவர்கள் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பொது மக்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி சுவாசம் மற்றும் தண்ணீர் சம்மந்தப்பட்ட பாதிப்புகளை சரிபடுத்த வேண்டும், இந்நிறுவனம் 65 ஆண்டுகளாக செயல்படுவதால் அதனால் நிலத்தின் தன்மைகள் மாறுவதாகவும், இது தொடர்பாக மக்களிடம் மீண்டும் கருத்துகள் கேட்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு தனது உரையை முடித்துக் கொண்டார்.

**24.திருமதி.மீனாம்பாள் தையல் பயிர்சிப் பள்ளி**

திருமி.மீனாம்பாள் அவர்கள், இப்பயிர்சி மையத்தில் கடந்த 13 ஆண்டுகளில் 1000 க்கு மேல் பெண்களுக்கு தையல் பயிர்சி வழங்கியுள்ளனர், இதில் வருடத்திற்கு இரண்டு குழுவாக பிரித்து மொத்தம் 30 பெண்களுக்கு தையல் பயிர்சி வழங்கியுள்ளனர். ஒரு குழவிற்கு 6 மாதம் பயிர்சி கொடுப்பதகாவும், இதில் பின் தங்கிய மற்றும் கைம்பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கி அவர்களின் முன்னேற்றத்திற்கு ராம்கோ நிறுவனம் பல உதவிகளை செய்து வருகிறது எனக்கூறி இத்திட்டத்தை வரவேற்றார்.

**25. சிவஞானபுரம் திருநங்கைகள்:**

திருநங்கைகளுக்கு 6 பசுமை வீடுகள் கட்ட உதவி கேட்டு ராம்கோ நிறுவனத்தை அணுகிய போது அவர்கள் உடனடியாக 900 சிமெண்ட் மூடைகள் கொடுத்து உதவியதாகவும், அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும், திருநங்கைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்றுக் கூறி ஆலை விரிவாக்கத்திற்கு வாழ்த்து தெரிவித்தனர்.

**26.திரு.ஆ.மாரிமுத்து, எத்திலப்பன்பட்டி கிராமம் (ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத் தலைவர்)**

இக்கருத்துக் கேட்புக் கூட்டத்த்திற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வரவேற்று, இப்பகுதியில் 800 நபர்களுக்கு தலைவராகவும், பாரதீய ஜனதா கட்சியில் ஆன்மிகப் பிரிவில் மாவட்ட செயலாளராக இருப்பதாகவும், எங்கள் ஊர் வளர்ந்த பொழுது ராம்கோ நிறுவனம் வளர்ந்து வருவதாகவும், நான்கு தலைமுறைகளாக இந்த கிராமத்தினர் இந்நிறுவனத்தில் வேலை செய்து வருவதாகவும், ஆலையின் இயக்கத்தால் மாசு ஏற்படுவதாக கூறும் பொது மக்கள் ஆலைக்கு அருகே உள்ள நிலங்களை வாங்கி வீடுகள் கட்டுவதாகவும், ஆழ்துளைக் கிணறு அமைத்து அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொள்வதாகவும், இவை அனைத்திற்கும் ஆலை ஈடுகொடுப்பதாகவும், ராம்கோ நிறுவனமானது அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதாகவும், சுற்றியுள்ள கிராமத்தினர் அனைவரும் இந்த ஆலையில் வேலை செய்வதாகவும், தானும் சில நபர்களுக்கு மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிறுவனத்தின் மூலம் வாங்கி கொடுத்ததாகவும், ராம்கோ ஆலையின் நிறுவுனர் பிறந்த நாளன்று அனைத்து கிராம மக்களும் ஆலைக்கு சென்று அவர் சிலைக்கு மரியாதை செலுத்தி விட்டு, அன்னதானம் உண்டு இலவச தையல் இயந்திரம் மற்றும் பிற உதவிகளையும் பெற்று செல்வதாகவும், இத்தொழிற்சாலைக்கு அவர்கள் நிலம் கொடுத்துள்ளதாகவும், பல்வேறு வகையில் ஆதரவு தந்து வருவதாகவும் தொழிற்சாலை வளர தாங்களும் வளர முடியும் என்றும், தங்கள் பிள்ளைகள் கல்வி கற்றப்பிறகு வேறு மாவட்டம் மற்றும் மாநிலத்திற்கு வேலைக்கு அனுப்புவதற்கு பதிலாக இங்கு வேலை வாய்ப்பை வழங்குவார்கள் என்பதை கருத்தில் கொண்டு இவ்வுதவிகள் செய்வார்கள் என்றும், எங்களது கிராமத்திற்கு அனைத்து வசதிகளையும் ராம்கோ நிறுவனம் செய்து வருவதாகவும், ஆலையின் சுற்றுச்சுவர் பின் தங்களது கிராமம் அமைந்தள்ளதாகவும், தங்கள் கிராமத்திற்கு குடிநீர் கழிப்பறை வசதி மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான உதவிகள் கோரி எழுத்து மூலம் மனுக்களானது அதிகாரிகளிடம் வழங்கியுள்ளதாகவும், அனைத்து உதவிகளையும் கூடிய விரைவில் செய்வதாக உறுதியளித்துள்ளனர். கோரிக்கை மனுவில் அருகிலுள்ள குளத்தை தூர்வார வேண்டும் என்றும், கிராமத்திற்கு கழிப்பறை வசதி, சில கட்டுமான உதவிகள் மற்றும் தகுதியான கல்வி கற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கேட்டதற்கு, நிறுவனம் தகுதியுள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கி வருவதாகவும், அவ்வாறு இல்லையென சிலர் தவறான செய்திகளை பரப்புகிறார்கள் என்று கூறினார். மேலும், இந்நிறுவனம் வளர்சியடைந்து அனைவருக்கும் தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும். தண்ணீர் வசதியை மேம்படுத்த வேண்டும், கிராமத்திற்கு செல்லும் வழியில் அரசு மதுபானக்கடை அமைந்துள்ளது. தங்களது கிராமத்திலிருந்து பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் அவ்வழியாக மாலை நேரத்தில் செல்லும் பொழுது மது அருந்துபவர்கள் சாலையின் இருபுறத்திலும் அமர்ந்து மது அருந்துவதால் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையற்ற பிரச்சனைகள் வருவதாகவும், அதனால் அவர்களுக்கு அருகிலுள்ள மாற்று மண் பாதையை சீர்செய்து தர வேண்டும் என கேட்டுக்கொண்டார். இது எங்களது நிறுவனம் என்று கூறி ஆலை விரிவாக்கத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**27.திரு.கணேசன், பெரிய வாடியூர் கிராமம் (நீர்நிலை பயன்படுத்துவோர் சங்க தலைவர்)**

எங்களது கிராமத்திற்கு மரக்கன்று வழங்கி, அதை பாதுகாக்க வலை மற்றும் மண் வெட்டி வழங்கி நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்து, தற்பொழுது அர்ஜீனா நதியில் நிறுவனத்திற்கு அருகில் ஒரு தடுப்பணை கட்ட வேண்டும் என்று நான்கு வருடத்திற்கு முன்பு மனு கொடுத்ததாகவும், அது பரிசீலனையில் உள்ளதாகவும், அதை வருவாய் துறை அவர்கள் அந்த தடுப்பணையை திட்ட செயலாக்கத்தை வேகப்படுத்தி, குடிநீர் பிரச்சனையை தீர்க்குமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டு, அர்ஜீனா நதியில் வாடியூர் மற்றும் கன்னிசேரி அருகில் தடுப்பனை அமைந்துள்ளது அதனைச் சுற்றி சீமைக் கருவேல மரங்கள் அதிகமாக இருப்பதாகவும், அதனை அப்புறப்படுத்தி அதில் விளையாட்டு மைதானம் அமைத்தால் பொது மக்களுக்கு உதவியாகவும், மேற்கூறிய உதவிகளை செய்யும் பொழுது மக்களுக்கு குடிநீர் பிரச்சனை தீரும் என்றுக் கூறி நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்து இத்திட்டத்திற்கு தனது ஆதரவினை தெரிவித்தார்.

**28.திரு.சக்திவேல் (அறம் அறக்கட்டளை நிறுவனர் மற்றும் தலைவர்)**

அறம் அறக்கட்டளை சாத்தூர் தலைமை இடமாக கொண்டு ஆலங்குளத்தில் இலவச உண்டு உரைவிட பயிற்சி முகாம் நடந்து கொண்டு இருப்பதாகவும், 25 மேற்பட்ட மாணவர்கள் அரசு பணிக்கு சென்று பணியாற்றி வருகிறார்கள். தற்பொழுதும் 20க்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்று வருவதாகவும், ராம்கோ நிறுவனத்தில் உயர் அதிகாரிகள் நேரடியாக வந்து ஆய்வு செய்து இலவசமாக 10 தையல் இயந்திரம் வழங்கி தையல் பயிற்சி வகுப்புகளை நடத்த உதவியுள்ளார்கள், அதன் மூலம் 30-க்கும் மேற்பட்ட பெண்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது, மேலும் தங்களது நிர்வாக வசதிக்காக கணிப்பொறி மற்றும் அச்சு இயந்திரம் வழங்கி மேலும் தேவைப்படும் உதவிகளுக்கு தங்களை அணுமாறு கேட்டுக்கொண்டு, கல்வி, பொருளாதாரம், சமூக மேம்பாடு, ஆண்மிகம் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற துறைகளில் தனது முத்திரைகளை பதித்து வருகிறது, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலின் குடமுழக்கு உட்பட பல்வேறு திருக்கோவில்களின் மேம்பாட்டு பணிகளுக்கு உதவிகள் செய்துள்ளனர், பள்ளி மாணவர்களுக்கு சீறுடைகள், புத்தகங்கள் போன்ற பல்வேறு உதவிகளை செய்து வருகின்றனவர, நிறுவனம் மட்டும் வளராது தங்கள் வளர்ச்சிக்கும் உதவுவதால் ஆலையின் விரிவாக்கத்திற்கு தங்களுடைய வரவேற்பை தெரிவித்துக்கொண்டார்.

**29. முன்னாள் துலுக்கப்பட்டி பஞ்சாயத்து தலைவர்:**

எங்களது கருப்பண்ணசாரி கிராமத்தில் ஸ்ரீகாளியம்மன் கோவில் வருஷாபிசேகம், 200 மீட்டர், 3 மீட்டர் அகலத்திற்கு பேவர் பிளாக் பாதை மற்றும் 100 அடி உயரத்தில் உயர் மின் கோபுர விளக்கு, 400 அடியில் நான்கரை இன்ச் ஆழ்துளைக் கிணறு மற்றும் அஞ்சம்பட்டி கிராமத்தில் வரு'ாபிசேகம் மற்றும் 6 இன்ச் ஆழ்துளைக் கிணறு 400 அடியிலும் மற்றும் துலுக்கப்பட்டி தெற்குத் தெருவில் சங்கர மாரியம்மன் கோவில் வருஷாபிசேகம் மற்றும் 100 அடி உயர் மின் கோபுர விளக்கு மற்றும் கிழக்கு அருந்ததியர் காலனி காளியம்மன் கோவில் வருஷாபிசேகம் மற்றும் இராஜீவ் காந்தி நகரில் 100 அடி உயரத்தில் உயர் மின் கோபுர விளக்கு ஆகிய நன்மைகளை ராம்கோ நிறுவனம் செய்து கொடுத்ததாகக் கூறி நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்தீர்கள். ராம்கோ நிறுவனம் இதுவரை செய்த சமூக முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றியும் இதன் பிறகு செய்ய வேண்டிய சமூக முன்னேற்ற நடவடிக்கைகளைப் பற்றி பொது மக்கள் கருத்துக்கள் கூறியதாகவும், குறிப்பாக உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பும், ஆலை விரிவாக்கத்தினால் காற்று மாசுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும், அதனால் செயல்திறன் மிக்க மாசு கட்டுப்பாடு கருவிகளை நிறுவி அதனை செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும், ஆலையின் செயல்பாட்டினால் நிலத்தடி நீர் குறைய வாய்ப்புள்ளதாகவும், அதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரி வலியுறுத்தினார்கள் என்றும், மேலும், ஆலையை சுற்றியுள்ள கிராமங்களில் சுகாதாரம் குறித்து ஆய்வு நடத்த வேண்டும். எழுத்துப்பூர்வமாக கொடுத்த மனுக்கள் மற்றும் வாய்மொழியாக தெரிவித்த கருத்துக்கள் ஒலிஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் அவர்களின் ஒப்புதலோடு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலைமை அலுவலகத்திற்கு சமர்பிக்கப்படும் என்றுக் கூறி மேலும், கருத்துக்கள் கூற யாரும் முன்வராததால் பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தினை நிறைவு செய்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்

மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கில நாளேடுகள்)
2. பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்தம் - 14 பக்கங்கள், 122 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பதிவின் நகல் விரலி (Pendrive)-ல் இணைக்கப்பட்டுள்ளது.
4. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.